# மோடியின் நிழல் மனிதர்:

# ஹிரேன் ஜோஷியின் எழுச்சியும் பின்னடைவும்!

**2016-**ஆம் ஆண்டில், பிரதமர் நரேந்திர மோடியின் டெல்லி பல்கலைக்கழகம் மற்றும் குஜராத் பல்கலைக்கழக பட்டங்கள் உண்மையானவையா என்பது குறித்து ஒரு பெரிய அரசியல் சர்ச்சை வெடித்தது. அப்போதைய டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் (RTI) கீழ் பிரதமரின் பட்டப்படிப்பு விவரங்களைப் பகிரங்கப்படுத்துமாறு பிரதமர் அலுவலகத்திற்கு (PMO) உத்தரவிடுமாறு மத்திய தகவல் ஆணையத்திற்கு (CIC) கடிதம் எழுதினார்.

இது அரசியல் கட்சிகளிடையே குற்றச்சாட்டுகள், பதில் குற்றச்சாட்டுகள் மற்றும் பத்திரிகையாளர் சந்திப்புகளுடன் ஒரு தேசிய விவாதத்தையே தூண்டியது. அப்போது புது தில்லியில் உள்ள பிரதமர் அலுவலகத்தில் சிறப்புப் பணி அதிகாரியாக (OSD) நியமிக்கப்பட்டிருந்த ஹிரேன் ஜோஷி, குஜராத் பல்கலைக்கழகத்தின் அப்போதைய துணை வேந்தர் எம்.என். பட்டேலை வாட்ஸ்அப் (WhatsApp) மூலம் தொடர்பு கொண்டார்.

மோடியின் பட்டங்கள் தொடர்பான தகவல்களைப் பகிர்ந்து கொள்ளுமாறு பல்கலைக்கழகங்களுக்கு மத்திய தகவல் ஆணையம் உத்தரவிட்ட அன்று, மதிப்பெண் பட்டியல்களைப் பகிர மறுத்த பட்டேல், ஆறு மாதங்களுக்கு முன்பே மோடியின் கல்வித் தகுதிகள் குறித்த விவரங்களை பிரதமர் அலுவலகத்தில் உள்ள ஹிரேன் ஜோஷிக்கு வாட்ஸ்அப் மூலம் அனுப்பி விட்டதாக செய்தியாளர்களிடம் தெரிவித்தார். அவர் கூறுகையில், “பிரதமர் அலுவலகமோ அல்லது மத்திய தகவல் ஆணையமோ உத்தரவிட்டால், அதன் பிரதிகளை ஊடகங்களுக்கு என்னால் வழங்க முடியும்” என்றார்.

மோடியின் நம்பிக்கைக்குரியவரான ஜோஷி, இத்தகைய நெருக்கடி மேலாண்மைக்காகவே (Crisis Management) அறியப்படுபவர். 2014இல் மோடி பிரதமர் பதவியேற்பதற்கு முன்பிருந்தே, மற்றவர்கள் செய்யத் தயங்கும் அல்லது செய்ய முடியாத காரியங்களைச் செய்யும் ஒரு நிழலைப் போல ஜோஷி அவருடன் இருந்து வருகிறார். மோடியின் பதவிக்காலத்தில் கிட்டத்தட்ட ஒரு தசாப்த காலமாக, ஜோஷி என்ன செய்தார் என்பது யாருக்கும் தெரியவில்லை. அவரை யாரும் பார்த்தது கூட இல்லை.

பிரதமரின் இணையதளத்தில், அவர் மற்ற பணியாளர்களுடன் இணைந்து இணைச் செயலாளராகப் பட்டியலிடப்பட்டிருந்தார். சிலர் அவரை மோடியின் ஊடக ஆலோசகர் என்றும், சிலர் அவரைத் தொழில்நுட்ப வல்லுநர் என்றும் குறிப்பிட்டன. 2023ஆம் ஆண்டு இந்தியாவில் நடைபெற்ற ஜி20 (G20) மாநாட்டின் ஒரு பகுதியாக எடுக்கப்பட்ட அதிகாரப்பூர்வமற்ற புகைப்படம் ஒன்றின் மூலமே உலகுக்கு அவர் முதன்முறையாகத் தெரியவந்தார்.

பத்திரிகையாளரும், முன்னதாக பாரதிய ஜனதா கட்சியுடன் தொடர்புடைய அரசியல்வாதியுமான அருண் ஷோரி, 2017ஆம் ஆண்டில் ஜோஷியைப் பற்றி பகிரங்கமாகக் குறிப்பிட்ட முதல் நபர்களில் ஒருவர். அவர் கூறுகையில், “பிரதமர் அலுவலகத்தில் ஹிரேன் ஜோஷி என்பவரின் தலைமையில் மோடிக்கு ஒரு தனிக்குழு உள்ளது... சமூக ஊடகங்களைக் கண்காணிப்பதும், அது குறித்த தகவல்களைப் பிரதமருக்கு உடனுக்குடன் தெரிவிப்பதுமே அவரது ஒரே வேலை,” என்று தெரிவித்தார்.

## பின்னடைவு

டிசம்பர் தொடக்கத்தில் இருந்தே, ஜோஷி பணிநீக்கம் செய்யப்பட்டதாக சமூக வலைதளங்களில் பல தகவல்கள் பரவி வந்தன. இந்த வதந்திகள் விரைவில் முழுமையான ஊகங்களாக மாறின. இந்தச் சூழலில், சட்டவிரோத சூதாட்ட செயலியான ‘மகாதேவ் ஆப்’ (Mahadev app) நெட்வொர்க்குடன் அவருக்குத் தொடர்பு இருப்பதாக ஆதாரமற்ற தகவல்கள் பரவிப் பெரும் பரபரப்பை ஏற்படுத்தின.

இந்தச் சூதாட்ட செயலி, சட்டவிரோத ஆன்லைன் சூதாட்டத்திற்கான ஒரு முக்கிய தளமாகும்.

இந்தச் சூழலில், காங்கிரஸ் கட்சியின் தலைமைத் தொடர்பாளர் பவன் கேரா, ஒரு பத்திரிகையாளர் சந்திப்பில் ஜோஷியைப் பற்றி எச்சரிக்கை விடுத்தார். ஜோஷி பிரதமர் அலுவலகத்திற்குள் மிகவும் சக்திவாய்ந்த நபராக இருப்பதாக அவர் குற்றம் சாட்டினார். இது குறித்து வெளிப்படைத்தன்மை தேவை என்று வலியுறுத்திய அவர், “பிரதமர் அலுவலகத்தில் அமர்ந்து கொண்டு ஹிரேன் ஜோஷி என்ன தொழில் செய்து கொண்டிருந்தார் என்பதைத் தெரிந்துகொள்ள நாட்டுக்கு உரிமை உண்டு... அது எந்தச் சூதாட்ட செயலி? அவருக்கு வெளிநாட்டு கூட்டாளிகள் யார்? அரசு இதை விளக்கவில்லை என்றால், இந்த விவாதங்கள் தொடர்வது இயல்பானது,” என்று கூறினார்.

பவன் கேராவின் குற்றச்சாட்டுகளைச் செய்தியாக வெளியிட்ட ஒரு சில ஊடகங்களில் ஒன்றான ‘தி பிரிண்ட்’ (The Print), அந்தச் செய்தியை வெளியிட்ட சிறிது நேரத்திலேயே அதன் இணையதளத்திலிருந்து நீக்கியது. மோடியின் ஆட்சியில் ஊடகங்கள் எதிர்கொள்ளும் அழுத்தத்தை இந்தச் செய்தி நீக்கம் அப்பட்டமாகக் காட்டுகிறது. உலகப் பத்திரிகை சுதந்திரக் குறியீட்டில் இந்தியா தற்போது 180 நாடுகளில் 151வது இடத்தில் உள்ளது. மோடியின் காலத்தில், தகவல்கள் மீதான அதிகாரம் ஒரு மையப்படுத்தப்பட்ட இயந்திரமாக மாறியுள்ளது; அங்கு செய்திகள் மிக நுணுக்கமாக வடிவமைக்கப்பட்டு வெளியிடப்படு கின்றன. இந்தச் சூழமைவின் மையத்தில், பிரதமரின் விவேகமான அதேசமயம் வலிமையான ஊடக உதவியாளராக ஜோஷி நிற்கிறார்.

விமர்சகர்களும் அரசியல் தலைவர்களும் இதைவிட இருண்ட ஒரு சித்திரத்தை முன்வைக்கின்றனர் அதாவது பா.ஜ.க.வின் பரப்புரை இயந்திரத்தின் மையப்புள்ளியாக ஜோஷி இருப்பதாக அவர்கள் கூறுகின்றனர். தொலைக்காட்சி விவாதங்களை ஜோஷிதான் வடிவமைக்கிறார் என்றும், எதைப் பெரிதுபடுத்த வேண்டும், எந்த உண்மைகளைப் புதைக்க வேண்டும் என்பதை அவரே தீர்மானிக்கிறார் என்றும் பல பத்திரிகையாளர்கள் குற்றம் சாட்டுகின்றனர். செய்திகள் வெளியாவதற்கு முன்பே, தேசியச் செய்தி நிரலை அவரே முடிவு செய்கிறார். மோடியை விமர்சிப்பவர்களின் சமூக வலைதளப் பதிவுகள், அவர்களின் செயல்பாடுகள், ஏன் அவர்களின் தனிப்பட்ட வாழ்க்கை வரை அனைத்தையும் ஜோஷி கண்காணித்து வருவதாகப் பல பத்திரிகையாளர்கள் தனிப்பட்ட முறையில் கூறுகின்றனர். மேலும், பா.ஜ.க.வின் ‘ஐடி செல்’ எனப்படும் டிஜிட்டல் படையும் ஜோஷியின் கட்டுப்பாட்டில்தான் இயங்குகிறது என்பதும், அது மாற்றுக் கருத்துகளை அடக்கவும், தங்களுக்குச் சாதகமற்ற உண்மைகளை மறைக்கவும் செயல்படுகிறது என்பதும் ஒரு பகிரங்க ரகசியமாகும்.

நவம்பர் மாதத்தில், சட்ட ஆணையத்திலிருந்து ஹிதேஷ் ஜெயின் திடீரென ராஜினாமா செய்ததிலிருந்து ஜோஷியைப் பற்றிய பேச்சுகள் தொடங்கின. இந்த ராஜினாமா அதிகாரப்பூர்வமாக உறுதிப்படுத்தப்பட்டாலும், அதற்கான காரணம் விளக்கப்படவில்லை.

பத்திரிகையாளர்கள் சிரில் சாம் மற்றும் பரஞ்சோய் குஹா தாகுர்தா எழுதிய ‘ஃபேஸ்புக்கின் உண்மை யான முகம்’ என்ற புத்தகம், 2009 முதல் ஜோஷியும் ஜெயினும் நெருங்கிய கூட்டாளிகளாக இருப்பதைச் சுட்டிக்காட்டுகிறது. ஜெயின் ‘ப்ளூகிராஃப்ட் டிஜிட்டல் ஃபவுண்டேஷன்’ (Bluekraft Digital Foundation) உடன் தொடர்புடையவர். இந்த அறக்கட்டளை, “தி ட்ரூ பிக்சர்” (The True Picture) என்றதவறானதகவல்களைப்பரப்பும்இணையதளத்துடன் தொடர்புடையது; இது மோடி எழுதிய புத்தகங்களை வெளியிட்டுள்ளதுடன், மோடியை விளம்பரப்படுத்துவதற்காக அர்ப்பணிக்கப்பட்ட ‘நமோ டெலிவிஷன்’ (NaMo Television) என்ற 24 மணிநேர கேபிள் டிவி சேனலுக்கான தேர்தல் பிரச்சார வீடியோக்களையும் தயாரித்துள்ளது. இக்கட்டுரை தொடர்பாக நேர்காணல் கோரி ‘தி வயர்’ அனுப்பிய மின்னஞ்சலுக்கு ஜெயின் பதிலளிக்கவில்லை.

டிசம்பர் 2 அன்று, மற்றொரு விரிசலாக தூர்தர்ஷன் மற்றும் அகில இந்திய வானொலி போன்ற சேவைகளை நடத்தும் தன்னாட்சி அமைப்பான பிரசார் பாரதியின் (Prasar Bharati) வாரியத் தலைவராக இருந்த முன்னாள் ஐ.ஏ.எஸ். அதிகாரி நவ்நீத் செகல் திடீரென ராஜினாமா செய்தார். ஜோஷிக்கு மிகவும் நெருக்கமான பத்திரிகையாளர் சுதிர் சவுத்ரியை, டிடி நியூஸ் (DD News) தொலைக்காட்சியின் தலைமை ஆசிரியராகப் பெரும் ஊதியத்தில் பணியமர்த்தியதை செகல் மேற்பார்வை யிட்டார் என்பதைப் பெயர் குறிப்பிட விரும்பாத ஒரு பத்திரிகையாளர் உறுதிப்படுத்தினார்.

இந்த வதந்திகள் விரைவில் சமூக வலைதளங்களிலிருந்து நாடாளுமன்றத்தின் தளம் வரை சென்றன; அங்கு காங்கிரஸ் தலைவர் பிரியங்கா காந்தி, பிரதமர் அலுவலகத்திடமிருந்து (PMO) பதில்களைக் கோரி பகிரங்கமாக அழுத்தம் கொடுத்தார். இணையதளத்தில், இது குறித்த கதைகள் மேலும் குழப்பமடைந்தன. சில தரப்பினர் அவர் அமைதியாகப் பணிநீக்கம் செய்யப்பட்டதாகக் கூறினர், மற்றவர்களோ அவர் மீண்டும் தனது பதவியில் அமர்த்தப்பட்டதாக வாதிட்டனர்.

பெயர் குறிப்பிட விரும்பாத காங்கிரஸ் அரசியல்வாதி ஒருவர் கூறுகையில், இந்த அரசியல் யூகங்கள் தீவிரமடைந்த நிலையில் ஒரு புதிய கருதுகோள் உருவானதாகத் தெரிவித்தார் - அதாவது, உத்தரபிரதேசத்தில் (UP) மக்கள் தொடர்பு நெருக்கடிகளைக் கையாள்வதில் நீண்டகாலமாக அறியப்பட்ட நவ்நீத் செகல், பிரதமர் அலுவலகத்திற்குள் ஒரு பெரிய பொறுப்பை ஏற்கும் விதமாகத் தானாக முன்வந்து பதவிவிலகியிருக்கலாம் என்பதே அது. அவரது திடீர் ராஜினாமா குறித்துச் செய்தி வெளியிட்ட ‘தி பிரிண்ட்’, செகலை உத்தரபிரதேச அரசின் “சிக்கல் தீர்ப்பவர்” (Troubleshooter) என்று குறிப்பிட்டது; குறிப்பாக அவரது கூர்மையான ஊடக மேலாண்மைத் திறனுக்காக அவர் அறியப்படுகிறார். ‘தி வயர்’ நேர்காணல் கோரி அனுப்பிய வாட்ஸ்அப் செய்திக்கு செகல் பதிலளிக்கவில்லை.

மோடியை பகிரங்கமாக ஆதரித்த தவ்லீன் சிங், ‘எனது மகனை நாடுகடத்துதல்’ (Sending my Son to Exile) என்ற கட்டுரையில், பத்திரிகையாளர் ஆதிஷ் தசீர்இன் ‘இந்திய வம்சாவளி குடிமகன்’ (OCI) அட்டை ரத்து செய்யப்பட்டபோது, ஆரம்பத்தில் அது மத்திய அரசின் தவறான புரிதல் என்று கருதி உள்துறை அமைச்சகத்தைத் தொடர்பு கொள்ள முயன்றதாகக் குறிப்பிட்டுள்ளார். அவர் கூறுகையில், “இருப்பினும், அமைச்சகத்தையோ அல்லது பிரதமர் அலுவலகத்தில் உள்ள ஹிரேன் ஜோஷியையோ தொடர்பு கொள்ள எடுத்த தொடர்ச்சியான முயற்சிகள் வீணாகின,” என்றார்.

“மிகவும் உயர்மட்டத்தில் உள்ள யாரோ ஒருவர் ஆதிஷ் மீது பழிவாங்க விரும்புவதை நான் அப்போதுதான் உணர்ந்தேன்,” என்று 2019இல் சிங் எழுதினார். “நரேந்திர மோடியின் சிதைக்கப்பட்ட சித்திரத்துடன், ‘பிரிவினையின் நாயகன்’ (Divider in Chief) என்ற வார்த்தைகளுடன் டைம் (Time) இதழின் அட்டையில் அவர் அந்தக் கட்டுரையை எழுதியது முதல், இது ஒரு அச்சமாக என் மனதின் ஓரத்தில் இருந்து வந்தது.”

சலுகைகள் மற்றும் தண்டனைகளுக்கு இடையே மாறி மாறிச் செயல்படும் ஜோஷியின் இத்தகைய அணுகுமுறைகளால், எதைச் சொன்னால் சலுகை கிடைக்கும், எதைச் சொன்னால் தண்டனை கிடைக்கும் என்பதை இந்தியப் பத்திரிகையாளர்கள் கற்றுக் கொண்டுள்ளனர் என்று விமர்சகர்கள் கூறுகின்றனர். மூத்த பா.ஜ.க. தலைவரான சுப்ரமணியன் சுவாமி தனது ட்வீட் ஒன்றில் இதை வழிமொழிந்துள்ளார்: “பிரதமர் அலுவலகத்தின் ஹிரேன் ஜோஷி என்ற உதவியாளர் மூலம் மோடி இந்திய ஊடகங்களின் குரல்வளையை நெரிப்பது, கிட்டத்தட்ட அந்த ஊடகங்களை ‘பாவ்லோவின் நாய்’ (Pavlov’s dog) போல ஆக்கியுள்ளது.” உளவியலாளர் இவான் பாவ்லோவின் சோதனைகளில், நாய்கள் தன்னுணர்வு இன்றி ஒரு தூண்டுதலுக்கு தானாகவே எதிர்வினையாற்றும் வகையில் பழக்கப்படுத்தப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

2017ஆம் ஆண்டின் தொடக்கத்தில், ‘இந்துஸ்தான் டைம்ஸ்’ ஆசிரியர் ஷிஷிர் குப்தா, ஜோஷிக்கு அனுப்பிய மின்னஞ்சல் ஒன்று தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் (RTI) மூலம் வெளிச்சத்திற்கு வந்தது. “மத்திய அரசுக்கு எதிராக கெஜ்ரிவால்” (KEJRIWAL AGAINST CENTRE) என்ற தலைப்பிலான அந்த மின்னஞ்சலில், அப்போதைய டெல்லி முதல்வர் எடுத்த ஒன்பது குறிப்பிட்ட முடிவுகளைப் பட்டியலிட்ட அந்தப் பத்திரிகையாளர், அவற்றை “கெஜ்ரிவாலின் விதிமீறல்களுக்கான உதாரணங்கள்” என்று குறிப்பிட்டிருந்தார். இந்த மின்னஞ்சல் பா.ஜ.க. தலைவரிடமிருந்தோ அல்லது பிரதமர் அலுவலகத்திடமிருந்தோ பதிலை எதிர்பாராமல், தகவலைத் தெரிவிப்பதற்காக மட்டுமே எழுதப்பட்டதாக ‘ஃப்ரண்ட்லைன்’ (Frontline) இதழ் செய்தி வெளியிட்டது.

ஜோஷி எப்போதும் மோடிக்கு நெருக்கமானவராக இருந்தபோதிலும், பிரதமர் அலுவலகத்தில் (PMO) தனது இடத்தைத் தக்கவைத்துக் கொள்ள அவர் போராட வேண்டியிருந்தது. 2014இல் மோடி குஜராத்திலிருந்து டெல்லிக்கு மாறியபோது, அவர் ஒரு ஊடக ஆலோசகரை நியமிப்பதற்கான எந்த அறிகுறியையும் காட்டவில்லை. இது குறித்துப் பத்திரிகையாளர் கூமி கபூர் குறிப்பிடுகையில், “ஊடக ஆலோசகருக்குப் பதிலாக, காந்திநகரில் மோடியுடன் பணியாற்றிய 70 வயதான, அடக்கமான மற்றும் விவேகமான முன்னாள் தகவல் அதிகாரி ஜெகதீஷ் தக்கர், மக்கள் தொடர்பு அதிகாரியாகச் செயல்பட டெல்லிக்கு அழைக்கப்பட்டார்,” என்று கூறினார்.

அவர் மேலும் கூறுகையில், “குஜராத்தில், ‘எங்களை அழைக்கவேண்டாம், நாங்களே உங்களை அழைப்போம்’ என்ற கொள்கையின் அடிப்படையிலான ஊடக மாதிரியை மோடி பின்பற்றினார். முதல்வர் விரும்பும் தகவல்கள் மட்டுமே ஊடகங்களுக்கு வழங்கப்படும்; ஆனால் அதிகாரப்பூர்வமற்ற விளக்கங்கள் (Offtherecord briefings), பிரத்யேகத் தகவல்களுக்கான கோரிக்கைகள் அல்லது முதல்வர் அலுவலகம் மற்றும் செயலகத்திற்குச் செல்வதற்கான அனுமதிகள் போன்றவை ஊக்குவிக்கப்படவில்லை,” என்றார்.

ஜெகதீஷ் தக்கர் செய்தி வெளியீடுகளைக் கவனித்து வந்த நிலையில், மோடியின் எக்ஸ் (Twitter) கணக்கை ஜோஷி கையாண்டார். பத்திரிகையாளர் தீரேந்திர கே. ஜா குறிப்பிடுகையில், தக்கருக்கும் ஜோஷிக்கும் இடையே பெரும் போட்டியும், ஒரு மறைமுகமான ஈகோ யுத்தமும் நிலவியதாகக் கூறினார். பிரதமரின் பிம்பத்தைக் கட்டமைப்பதில் இருவருமே முக்கியப் பொறுப்பில் இருந்தனர்: ஜெகதீஷ் தக்கர் பாரம்பரிய ஊடகங்களிலும், ஜோஷி இணையதளத்திலும் அந்தப் பணியைச் செய்தனர்.

2018இல் தக்கர் காலமான பிறகு, சவுத் பிளாக்கில் (South Block) மோடியின் மிக முக்கியமான நபராக ஜோஷி உருவெடுத்தார். மோடியின் இரண்டாவது பதவிக் காலத்தில், ஜோஷியின் அதிகாரம் தகவல் தொழில்நுட்பம் மற்றும் சமூக ஊடகங்களைத் தாண்டி விரிவடைந்தது. அவருக்கு நீரவ் ஷா மற்றும் யாஷ் ராஜீவ் காந்தி ஆகிய இரண்டு இளம் வல்லுநர்கள் உதவினர். சமூக ஊடகங்களில் உலகளவில் அதிகப் பின்தொடர்பவர்களைக் கொண்ட அரசியல்வாதிகளில் ஒருவராக மோடியை மாற்றியது ஜோஷிதான்.

2008ஆம் ஆண்டில், அப்போதைய குஜராத் முதல்வர் மோடி கணினி பொறியாளர்களுக்கான ஒரு விழாவில் கலந்து கொண்டபோது, ஜோஷியின் வாழ்க்கை திடீரென மாறியது. பத்திரிகையாளர் ராஜ்தீப் சர்தேசாய் தனது ‘2014: தி எலக்சன் தட் சேஞ்ச்டு இந்தியா’ என்ற புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளபடி, ஒரு தொழில்நுட்பக் கோளாறால் அந்த நிகழ்ச்சி தடைபட்டது அப்போது ஜோஷி முன்வந்து அந்தப் பிரச்சினையை உடனடியாகச் சரிசெய்தார். அவரது அந்தத் திறமையால் ஈர்க்கப்பட்ட மோடி, ஜோஷியைத் தனது சிறப்புப் பணி அதிகாரியாக (OSD) தேர்ந்தெடுத்தார். அந்தத் தருணத்திலிருந்து, மோடியின் டிஜிட்டல் தளங்களின் பாதுகாவலராக மாறிய ஜோஷி, அவரது சமூக ஊடகங்கள் மற்றும் தொழில்நுட்ப உத்திகளுக்குப் பொறுப்பேற்றார்.

ஜோஷி தினமும் காலையில் மோடியைச் சந்தித்து, இந்தியாவின் சமூக ஊடக விவாதங்கள் குறித்த சுருக்கமான அறிக்கையை வழங்குவதாகப் பரவலாகக் கூறப்படுகிறது. அவர் வெறும் தகவல்களைத் தருவதுடன் நில்லாமல், நாடு முழுவதிலும் உள்ள கட்சித் தொண்டர்கள் மற்றும் சாதாரண மக்களின் கருத்துகளையும் பிரதமரிடம் கொண்டுசேர்க்கிறார். பல்வேறு பகுப்பாய்வுக் கருவிகளைப் பயன்படுத்தி, பிரதமரின் அன்றாடத் திட்டங்களை அவர் வகுக்கிறார். மோடி தேர்தல் பிரச்சாரங்களுக்கோ அல்லது சர்வதேசப் பயணங்களுக்கோ செல்லும்போது, ஜோஷி எப்போதும் அவருடனேயே இருப்பார்.

ட்விட்டரில் (Twitter) மக்கள் என்ன பேசுகிறார்கள் என்பதை மோடி மிகத் தீவிரமாகக் கவனிப்பார் என்று சர்தேசாய் தனது புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார். ஒருமுறை சர்தேசாயின் மனைவியும் அப்போதைய சக ஊழியருமான சாகரிகா கோஷ், மோடியின் மனைவியைப் பற்றி ட்வீட் செய்தபோது, மோடி தொலைபேசி வாயிலாக சர்தேசாயிடம், “அரே, நீங்களும் உங்கள் மனைவியும் இந்த நாட்களில் ட்விட்டரில் அதிகமாக இருக்கிறீர்கள்!” என்று கூறினார். கோஷின் அந்த ட்வீட்கள், சிஎன்என்ஐபிஎன் (CNNIBN) செய்தி நிறுவன நிர்வாகத்தின் கண்டனத்திற்கு உள்ளானது. ட்விட்டரில் மோடியைப் பற்றி விமர்சிக்க வேண்டாம் என்று அவர் கேட்டுக்கொள்ளப்பட்டார்.

இருபது ஆண்டுகளுக்கும் மேலான அனுபவம் கொண்ட ஒரு மூத்த ஆசிரியர், தொலைக்காட்சிச் செய்திகளில் ஜோஷியின் தாக்கத்தை நினைவுகூர்ந்து கூறுகையில்: “கொரோனா பரவலின் போது, தப்லிகி ஜமாத் (Tablighi Jamaat) விவகாரத்தை மிகைப்படுத்தியதும், ‘கொரோனா ஜிஹாத்’ போன்ற தூண்டும் வகையிலான சொற்கள் விவாதங்களில் மீண்டும் மீண்டும் பயன்படுத்தப்பட்டதும், மிக உயர்மட்டத்திலிருந்து உருவாக்கப்பட்ட ஒரு கருத்தாக்கம் என்பதே என் கருத்து,” என்றார். மேலும், “இந்தி மற்றும் ஆங்கிலத் தொலைக்காட்சி ஆசிரியர்கள் பல வாரங்களாகப் பிரதமர் அலுவலகத்திலிருந்து வாட்ஸ்அப் செய்திகளைப் பெற்றனர்; அதில் முஸ்லிம் சமூகத்தின் மீது அதிக கவனம் செலுத்துமாறு வலியுறுத்தப்பட்டது என்பது ஒரு பகிரங்க ரகசியம்,” என்றும் அவர் கூறினார். பல முக்கிய செய்தி நிறுவனங்கள் தப்லிகி ஜமாத் நிகழ்வை ஒரு வகுப்புவாதச் செய்தியாக மாற்றியது, கோவிட் பாதிப்பு அதிகரிப்பதற்குக் கூட்டுப் பொறுப்பாக முஸ்லிம்களைச் சித்தரித்தது. இந்தச் செய்தி வெளியீடுகள் நீண்டகால சமூக விளைவுகளை ஏற்படுத்தியதுடன், பின்னர் நீதிமன்றங்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் பத்திரிகை அமைப்புகளால் விமர்சிக்கப்பட்டன.

டெல்லியில் 15 ஆண்டுகள் அனுபவம் வாய்ந்த அரசியல்வாதி ஒருவர் கூறுகையில், “ஆபரேஷன் சிந்தூர் (Operation Sindoor) நடவடிக்கைக்குப் பிறகுதான் நிலைமை மோசமடைந்தது,” என்றார்.

காஷ்மீரின் பஹல்காமில் நடந்த பயங்கரவாதத் தாக்குதலில் 26 பேர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து, இந்தியா மே 7 அன்று ‘ஆபரேஷன் சிந்தூர்’ நடவடிக்கையைத் தொடங்கியது. பாகிஸ்தானுக்குள் உள்ள பல இலக்குகள் மீது ஒருங்கிணைந்த தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இதனால் இரு நாடுகளுக்கும் இடையே பதற்றம் அதிகரித்து, எல்லைக் கட்டுப்பாட்டு கோட்டில் படைகள் குவிக்கப்பட்டன. நான்கு நாட்களுக்குப் பிறகு, அப்போதைய அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப், இந்தியா மற்றும் பாகிஸ்தான் இடையே தான் தனிப்பட்ட முறையில் சமரசம் செய்து வைத்ததாகச் சமூக ஊடகங்களில் பதிவிட்டது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. ஆபரேஷன் சிந்தூர் தொடர்பான ஊடக மேலாண்மை அதாவது இந்தியா கராச்சி மற்றும் லாகூரைக் கைப்பற்றிவிட்டது என்று முக்கிய ஊடகங்கள் கூச்சலிட்டது உலகளாவிய ரீதியிலும், போரின் நடுவே தவறான ஊடகச் செய்திகளால் ஆயுதப் படைகள் குழப்பமடைந்த வகையிலும் மத்திய அரசுக்கு பெரும் சங்கடத்தை ஏற்படுத்தியது.

பெயர் குறிப்பிட விரும்பாத அந்த அரசியல்வாதி கூறுகையில், “நரேந்திர மோடிக்குத் தனது ‘விஸ்வகுரு’ (Vishwaguru) பிம்பம் என்பது மிகவும் பிடித்தமான ஒரு கருத்து. வெளிநாடுகளில் நடத்தப்பட்ட பிரம்மாண்டமான புலம்பெயர் இந்தியர்களின் நிகழ்ச்சிகள், உலகளாவிய பிரச்சினைகளைத் தீர்ப்பவராக இந்தியாவைச் சித்தரித்தது, யோகா மற்றும் தடுப்பூசி ராஜதந்திரம், மற்றும் 2023இல் ஜி20 மாநாட்டை வெற்றிகரமாக நடத்தியது ஆகியவற்றின் மூலம் ஜோஷி அந்தப் பிம்பத்தை 2014 முதல் கவனமாக உருவாக்கி வந்தார். இது மோடியை வெறும் இந்தியப் பிரதமராக மட்டுமன்றி, உலகளாவிய விவாதங்களை வடிவமைக்கும் ஒரு தலைவராகச் சித்தரித்தது,” என்றார்.

இருப்பினும், போர் நிறுத்தத்திற்குத் தான் தான் காரணம் என்று ட்ரம்ப் மீண்டும் மீண்டும் கூறியபோது, அந்த கவனமாக உருவாக்கப்பட்ட பிம்பம் எதிர்பாராத அடியைச் சந்தித்தது. எந்தவொரு வெளிநாட்டுத் தலையீடும் இல்லை என்று இந்திய அரசு உறுதியாக மறுத்தபோதிலும், ட்ரம்ப்பின் கூற்று ஒரு பிம்பச் சிக்கலை (perception problem) உருவாக்கியது. இந்தியா உண்மையிலேயே ஒரு ‘விஸ்வகுரு’ என்றால், ஒரு தேசிய நெருக்கடியின் போது அதற்கு ஏன் வெளிநாட்டின் தலையீடு தேவைப்படுகிறது என்று மோடியின் விமர்சகர்களும் ஊடகங்களும் கேள்வி எழுப்பின.

இதன் விளைவாக இணையதளத்தில் உருவான மோதல்கள், சமூக வலைதளக் குழுக்கள் (troll networks) மற்றும் சர்வதேசக் கருத்துகளால் தீவிரமடைந்தன. இது இந்தியாவின் உத்திசார் சுயாட்சி (Strategic autonomy) சமரசம்செய்யப்பட்டதுபோன்றதோற்றத்தைஏற்படுத்தியது. எதிர்பாராத ஒரு வெளிநாட்டு உரிமை கோரலாலும், குழப்பமான தகவல் போராட்டத்தாலும் மோடியின் ‘விஸ்வகுரு’ பிம்பத்தில் விரிசல் ஏற்பட்டது.

அந்த அரசியல்வாதி மேலும் கூறுகையில், “மோடி இந்தத் தவறுக்காக ஜோஷியைக் குற்றம் சாட்டினார். இக்கட்டான சூழல்களைக் கையாளும் அவரது ‘நெருக்கடி மேலாளரால்’ இந்த நெருக்கடியைச் சமாளிக்க முடியவில்லை. மோடி மிகவும் முக்கியமாகக் கருதும் அவரது பிம்பம், 2024 தேர்தலுக்குப் பிறகு ஏற்கனவே சரிவைச் சந்தித்திருந்தது. மோடியின் சர்வாதிகாரப் போக்கு குறித்த பொதுமக்களின் எண்ணத்தை மாற்ற ஜோஷியால் இயலவில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக, ‘விஸ்வகுரு’ பிம்பம் சிதைந்தது அவர்கள் இருவருக்கும் இடையிலான உறவில் விழுந்த கடைசி அடியாக அமைந்தது. அதன்பிறகு, பிரதமர் அலுவலகத்தில் ஜோஷியின் பொறுப்புகள் குறைக்கப்பட்டன,” என்றார்.

பெயர் குறிப்பிட விரும்பாத முன்னாள் பத்திரிகையாளர் ஒருவர் கூறுகையில், “மோடியின் பிரதமர் அலுவலகத்தில் மற்றொரு சிறப்புப் பணி அதிகாரியான பிரதீக் தோஷி, காலியான அந்த இடத்தைப் பிடித்துக்கொண்டார். முன்னதாக பிரதமர் அலுவலகத்தின் ஆராய்ச்சி மற்றும் உத்தி பிரிவுக்கு (Research and strategy wing) தோஷி பொறுப்பாக இருந்தார். ஊடகத் துறை சார்ந்த பொறுப்புகள் தோஷியிடம் ஒப்படைக்கப்பட்டபோது, ஜோஷிக்கும் தோஷிக்கும் இடையிலான மோதல் அதிகரித்தது,” என்றார். பிரதீக் தோஷி, நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனின் மருமகன் என்பது குறிப்பிடத்தக்கது.

பதிவுத் தபால் மூலம் விரிவான பதிலைக் கோரி ‘தி வயர்’ அனுப்பிய வினாக்களுக்கு பிரதீக் தோஷியோ அல்லது பிரதமர் அலுவலகமோ இதுவரை பதிலளிக்கவில்லை.

சூதாட்ட மோசடி குற்றச்சாட்டுகள் குறித்து, 2023 முதல் ஜோஷியின் பணிகளை உன்னிப்பாகக் கவனித்து வரும் அந்த முன்னாள் பத்திரிகையாளர் கூறுகையில், “ஊழல் காரணமாக மோடி அவரை வெளியேற்றுகிறார் என்பது ஒரு பலவீனமான குற்றச்சாட்டாகும். அப்படி இருந்தால், அவர் பிரதமர் அலுவலகத்தில் உள்ள அனைவரையும் வெளியேற்ற வேண்டியிருக்கும். பிரதமரைச் சந்திப்பதற்கான வாய்ப்பை (access) ஏற்படுத்தித் தருவது போன்ற அடிப்படை விஷயங்களுக்கே பிரதமர் அலுவலகத்தில் இருப்பவர்கள் கணிசமான பணத்தைச் சம்பாதிக்க முடியும். இருப்பினும், பிரதமர் அலுவலகத்திற்குள் ஜோஷி மீது ஒரு மறைமுகமான பொறாமை இருந்ததாக நான் கருதுகிறேன். அவர் எந்நேரமும் பிரதமரின் நம்பிக்கையைப் பெற்றிருந்தார். மற்ற அமைச்சகங்களில் உள்ள மூத்த அரசு அதிகாரிகள் கூட, ஒரு இணைச் செயலாளர் அந்தஸ்தில் உள்ள அதிகாரி எப்படி ஒரு காரியத்தைப் பிரதமரிடம் இவ்வளவு எளிதாகச் சாதிக்கிறார் என்று கிண்டலாகப் பேசுவார்கள். ஒரு காலத்தில் பிரதமர் அலுவலகத்தில் உள்ள 70 முதல் 80 அதிகாரிகளின் வளங்களையும் ஜோஷி பயன்படுத்தும் அதிகாரத்தைப் பெற்றிருந்தார். ஜோஷி மிகவும் சக்திவாய்ந்தவராக இருந்தார். அவர் ஒரு ‘பகிரங்க ரகசியம்’ என்பதே அவரது அதிகாரத்திற்குப் பலமாக இருந்தது,” என்றார்.

அவர் மேலும் கூறுகையில், “ரகசியத்தன்மை என்பது மோடியால் நியமிக்கப்பட்ட மூத்த அதிகாரிகளால் பின்பற்றப்படும் ஒரு உத்தி. உச்சத்தில் ஒரு சர்வாதிகாரத் தலைவர் இருக்கும்போது, உங்களை நீங்கள் அதிகமாக முன்னிலைப்படுத்திக் கொள்ளாமல் இருப்பதே நல்லது. பிரதமர் அலுவலகத்தில் உள்ள அனைவரும் தங்களைப் பற்றிய தகவல்கள் வெளியே தெரியாதவாறு பார்த்துக் கொள்கின்றனர். பொதுவெளியில் தங்களை வெளிப்படுத்திக் கொள்வது யாருடைய நலனுக்கும் உகந்தது அல்ல,” என்று தெரிவித்தார்.